Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 25 2023

புதன்கிழமை ஒக்டோபர் 25, 2023 | ஒளி: 09 கதிர் 113 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## 7 நாடுகளுக்கு விசா இலவசம்



ஏழு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளிடமிருந்து விசா கட்டணத்தை அறவிடாமலிருக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

தொடர்ச்சி P2

### கறுப்பு பட்டியலில் இருந்து

## ‘எமில்’, ‘ரமேஷ்’ நீக்கம்



பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவியதற்காகக் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்ட இருவரை அதிலிருந்து நீக்கி பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த தடை நீக்கம் திங்கட்கிழமை (23) முதல் அமுலுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், ‘ரமேஷ்’ என்றழைக்கப்படும் நிக்லப்பிள்ளை ஆண்டனி எமில் லக்ஷ்மி காந்தன் மற்றும் முருகேசு ஸ்ரீ சண்முகராஜா ஆகியோரின் பெயர்களே கறுப்பு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. தொடர்ச்சி P2

### வட்டி விகிதங்களைக் குறைக்காத

## வங்கிகள் மீது நடவடிக்கை



வங்கி வட்டி விகிதங்களைக் குறைத்து மத்திய வங்கியினால் அண்மையில் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

தொடர்ச்சி P2

## 5 சதவீதத்தை மீள செலுத்த திட்டம்

60 அல்லது 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளிடமிருந்து வங்கி அல்லது நிதி நிறுவனங்களால் வட்டி வருமானத்தில் இருந்து அறவிடப்பட்ட 5 சதவீத வருமான வரி முற்பணத்தை மீள செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரஜைகளின் நிதி நிலைமைக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2



# “மந்திரங்களை தேடி காலத்தை கடத்துகிறது”

### பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கப்படுவதால் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்



ஒரு நாளேனும் ஆட்சியை நீடிப்பதற்கான மந்திரங்களை தேடுவதிலையே அரசாங்கம் காலத்தை கழிக்கிறது. மக்கள் ஆணையற்ற அரசாங்கத்தின் இறுதி நாடகமே அரங்கேற்றப்பட்டு வருகிறது என்று தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினரான கயந்த கருணாதிலக்க, சகல தரப்பு மக்களும் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என்றார்.

நாடு பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்துள்ளது. வெள்ளம், சுனாமி உள்ளிட்ட இயற்கை அனர்த்தகங்கள் உள்நாட்டு கிளர்ச்சிகள், பல வருட காலமாக பிரிவினைவாத யுத்தம் என பல அனர்த்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்துள்ளோம். ஆனால் இக்கால கட்டங்களில் பொருளாதாரம் வங்குரோத்தடையவில்லை. ஒரு குடும்பம் இன்று நாட்டை வங்குரோத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## ரூ.64 ஆயிரத்தை ஏப்பம் விட்டு ‘முட்டை’ நாடகமாடிய அதிபர்



எஸ் சதீஸ்

நவராத்திரி விழாவுக்கு பாடசாலை மாணவர்களிடம் வசூல் செய்யப்பட்ட 64 ஆயிரம் ரூபாயை அப்படியே ஆட்டையை போட்ட பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர், பூசாரியிடம் முட்டையொன்றை மந்திரித்து பாடசாலை மாணவர்கள் முதல் ஆசிரியர்கள் வரை அனைவரிடமும் சத்தியம் வாங்கிய சம்பவமொன்று அம்பலமாகியுள்ளது. தொடர்ச்சி P2

### 200 கி.கி போதைப்பொருளுடன்

## ஆழ்கடலில் ஐவர் கைது

200 கிலோ கிராம் போதைப்பொருள் சரக்குகளுடன் இலங்கை மீனவர்கள் 5 பேர் ஆழ்கடலில் வைத்து கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இலங்கைக்கு வந்த பல நாள் படகிலேயே இந்த போதைப் பொருளை இவர்கள் கடத்தி வந்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## இது மேகமல்ல...

பல கோரிக்கைகளை முன்வைத்து அதிபர்–ஆசிரியர் சங்கம், பிட்டகோட்டையில் செவ்வாய்க்கிழமை (24) நடத்திய எதிர்ப்புப் ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியை பொலிஸார், கண்ணீர் புகைக்குண்டு வீசி கலைத்தனர்.



## போதைப்பொருளை தடுக்க புதிய கட்டளை நிறுவனம்

### துறைமுகத்தில் வைத்து சாகல உறுதி

வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதைத் தடுப்பதற்கான போதைப்பொருள் தடுப்பு கட்டளை நிறுவனமொன்று (*Anti-Narcotic Command*) ஸ்தாபிக்கப்படுமெனத் தேசியப் பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அதனூடாக முப்படையினர் மற்றும் அரச புலனாய்வு பிரிவினை இணைத்து சுற்றிவளைப்புகளுக்கு அவசியமான திட்டங்களை வகுப்பதற்கான இயலுமை கிட்டும் என்றும் தெரிவித்தார். தொடர்ச்சி P2



## 10 மாதங்களில் 400 யானைகள் மரணம்

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 400 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2

## “ஆட்சியைக் கவிழ்க்க எம்மால் முடியும்”



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிராக செயற்பட்டால் அரசாங்கத்தை கவிழ்க்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க கூறுகிறார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ச்சி P2




## மனித கடத்தல்காரர்கள் மன்னாரில் கைது

தலைமன்னார் மணல் குன்றுகள் 3இல் இலங்கை கடற்படையினர் ஒக்டோபர் 21ஆம் திகதியன்று மேற்கொண்ட தேடுதலின்போது மனித கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் நால்வரை கைது செய்துள்ளனர். அத்துடன் 02 டிங்கி படகுகளையும் கைப்பற்றினர்.

கடல் வழிகள் ஊடாக இடம்பெறும் பரந்தளவிலான சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக கடற்படையினர் தீவின் கரையோர மற்றும் கடற்பரப்புகளில் வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். தொடர்ச்சி P2

## ‘ஷொக்’ கொடுக்காத ஒரே தலைவர் மஹிந்த

### காரியவசம் புகழாரம்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு திட்டத்துடன் செயற்பட்டு, கொத்மலை, நுரைச்சோலை, உமா ஓயா போன்ற பாரிய திட்டங்களை உருவாக்கி குறைந்த விலையில் நாட்டுக்கு மின்சாரம் வழங்க பாடுபட்டார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## நிவாரண திட்டங்கள் குறித்து பிரதமர் எடுத்துரைப்பு

பிரதமர் தினேஷ் குணவர்தன, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு முறையின் முன்னேற்றம், அரசாங்கத்தின் இடைக்கால மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான நீண்ட கால திட்டங்களுக்கு தேவையான உதவிகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. தொடர்ச்சி P2

## முட்டை இறக்குமதி டிசெம்பர் வரை அவசியம்

டிசெம்பர் மாதம் வரை மாத்திரம் இலங்கைக்கு முட்டைகளை இறக்குமதி செய்வது அவசியமென விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் நுகர்வுக்குத் தேவையான அளவு முட்டைகளை ஜனவரி மாதத்திற்குள் நாட்டில் உற்பத்தி செய்ய முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனால் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்குள் நாட்டில் முட்டைகள் உபரியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன் வெளிநாடுகளுக்கும் முட்டைகளை ஏற்றுமதி செய்ய முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘எமில்’, ‘ரமேஷ்’ நீக்கம்



இதேவேளை, ‘ரமேஷ்’ மீது இன்டர்போலும் சிவப்பு அறிவிப்பை வெளியிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பயங்கரவாத நடவடிக்கைகளை ஆதரித்ததற்காக இருவரும் 2014 முதல் கறுப்பு பட்டியலில் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 7 நாடுகளுக்கு விசா இலவசம்

சீனா, ரஷ்யா, இந்தியா, தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேஷியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்காக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## 5 சதவீதத்தை மீள செலுத்த திட்டம்

இதற்கிணங்க, வருடாந்த வருமானம் 12 இலட்சத்திற்கு மேற்படாத வரி வருமானம் மீதான முற்பண வரி அறவிடப்பட்டுள்ள அனைத்து சிரேஷ்ட பிரஜைகளும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

சிரேஷ்ட பிரஜைகள் ஒரு காலாண்டுக்கு அதிகபட்சமாக 25,000 ரூபாய் வரை மீளப் பெறலாம் என்பதுடன், அந்த மீளப் பெறுகையானது, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகி அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி முடிவடையும் காலப்பகுதியை கொண்டிருத்தல் வேண்டும்.

தகுதி வாய்ந்தவர்களுக்கு ஆண்டு முழுவதும் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மீளப்பெறும் தொகை, சிரேஷ்ட பிரஜைகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வைப்பிலிடப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் சிரேஷ்ட பிரஜைகள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தோ அல்லது அருகிலுள்ள நகர அலுவலகத்திற்குச் சென்றோ விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த பின்னர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதி வாய்ந்தோர் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் இது தொடர்பான அனைத்து தகவல்களையும் 1944 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# “மந்திரங்களை தேடி காலத்தை கடத்துகிறது”

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (24) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மின் கட்டண திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதியைக் கோரியுள்ளதாக எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டார்.

பிற்பாடு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது எனது பணி, எனது சர்வதேச தொடர்புகளை இதற்காக நாம் பயன்படுத்துவேன் என்றும்,சர்வதேச ஆதரவுகளைப் பெறுவது எவ்வாறு என காட்டுகிறேன் என்று கூறி, ராஜபக்ஷர்களின் ஆசீர்வாதத்தோடு ஆட்சிக்கு வந்த தலைவர்களால் இராஜதந்திரத்தைக் கையாள்வதை விடுத்து சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட தவணையை உரிய நேரத்திற்குப் பெற முடியாமல் தோல்வியடைந்துள்ளனர்.

மக்களின் நாளாந்த நுகர்வுப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கப்படுவதால் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

பண வீக்கம் குறைந்துள்ளதாக அரசாங்கம் ஆய்வுகளை வெளியிட்டாலும், உண்மையிலேயே பணவீக்கம் குறைந்துள்ளதா அல்லது அதிகரித்துள்ளதா என்பதைச் சந்தைக்குச் சென்று பார்த்தால் நடைமுறை ரீதியாகப் புரிந்து கொள்ள முடியும் என்றார்.

## ரூ.64 ஆயிரத்தை ஏப்பம் விட்டு ‘முட்டை’ நாடகமாடிய அதிபர்

மத்திய மாகாணம் ஹட்டன் கல்வி வலையத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ பிரதேச தோட்டப் பகுதியில் இயங்கும் பாடசாலையில் ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நவராத்திரி விழாவினை முன்னிட்டு ஒரு மாணவரிடம் 150 ரூபாய் அடிப்படையில் 64,000 ரூபாய் பணம் குறித்த பாடசாலையின் அதிபரினால் வசூல் செய்யப்பட்டது.

இவ்வளவு பணம் வசூல் செய்யப்பட்டு இரண்டு தினங்களில் பாடசாலையின் அதிபரினால் களவாடப்பட்டதாக மாணவர்களும் ஆசிரியர்களும் விசனம் தெரிவிக்கின்றனர். அதனை மூடி மறைப்பதற்கே முட்டையை வைத்து நாடகமாடுகின்றார் என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்த பணம் கொள்ளை யடிக்கப்பட்டைமையினால் குறித்த பாடசாலையில் செவ்வாய்க்கிழமை (24) இடம் பெறவிருந்த விஜயதசமி பூஜைக்கான ஏற்பாடுகள் மந்தகதியில் இடம் பெற்றுள்ளன.

விஜயதசமி பூஜையினை நடத்துமாறு மாணவர்களும் ஆசிரியர்களும் கோரிக்கை விடுத்தபோது பாடசாலையின் அதிபர் பூசாரி ஒருவரிடம் சென்று முட்டை ஒன்றை மந்திரித்து மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் சத்தியம் பெற்றுள்ளதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

கல்வி அமைச்சினால் 2007ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தின் படி பாடசாலைகளில் இடம் பெறுகின்ற நிகழ்வுகளுக்கு எந்த ஒரு மாணவனிடம் இருந்தும் பணம் அறவிட முடியாது. அதிபரிடம் கையளிக்கப்பட்ட 64,000 ரூபாய் பணம் காணாமல் போனமை தொடர்பில், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யுமாறு ஆசிரியர்கள் சிலர் கோருகின்ற போதும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கு அந்த அதிபர் தயக்கம் காட்டி வருகின்றார் என அறியமுடிகின்றது.

**“ விஜயதசமி பூஜையினை நடத்துமாறு மாணவர்களும் ஆசிரியர்களும் கோரிக்கை விடுத்தபோது பாடசாலையின் அதிபர் பூசாரி ஒருவரிடம் சென்று முட்டை ஒன்றை மந்திரித்து மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் சத்தியம் பெற்றுள்ளதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் தொடர்பில் பெற்றோர்களும் மாணவர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்**

மாணவர்களிடம் பணம் வசூலிக்கப் படாமல் நவராத்திரி விழாவினை வெகு விமர்சையாக

ஏனைய பாடசாலைகளைச் சேர்ந்தோர். கொண்டாடி வருகின்றனர். ஆனால் இந்த ஒரு பாடசாலையில் மாத்திரம் மாணவர்களிடம் பணம் வசூல் செய்யப்பட்டும் அதனைக் கொள்ளையடித்துவிட்டு அதிபர் நாடகமாடுகின்றார் என்றும் பெற்றோர்களும் மாணவர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

## “ஆட்சியைக் கவிழ்க்க எம்மால் முடியும்”

பொதுஜன பெரமுனவின் அனைத்து அமைச்சர்களும் நீக்கப்பட்டாலும் நீங்கள் காத்திருப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என்று தொகுப்பாளர் கேட்டதற்கு.

இல்லை, இல்லை எம்மால் ஆட்சியைக் கவிழ்க்க முடியும். எம்மால் செய்யக்கூடிய பல விடயங்கள் உள்ளன. வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதுடன் பல விடயங்களைச் செய்ய முடியும் என்று அவர் தெரிவித்தார்.

## மனித கடத்தல்கா ரர்கள் மன்னாரில் கைது

இந்த முயற்சிகளின் விரிவாக்கமாக, SLNS தம்மன்னா மற்றும் SLNS கஜபா ஆகியன கடலோர ரோந்துக் கப்பல்களை மணல் குன்றுகள் 3இல் நிலைநிறுத்தி இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டது. டிங்கி படகுகளில் சந்தேகத்தின் பேரில் பயணித்த 04 பேர் செல்லுபடியான அனுமதிப்பத்திரம் இன்றி அப்பகுதியில் தங்கியிருந்ததாலும், வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு மனித கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படுவதாலும், அவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**“ சந்தேகநபர்களை சட்ட நடவடிக்கைகளுக்காக டிங்கி படகுகளுடன் சந்தேகநபர்கள், தலைமன்னார் பொலிஸார் மற்றும் மன்னார் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.**

இந்த தேடுதல் நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மன்னார் பேசாலை பிரதேசத்தை சேர்ந்த 28 முதல் 45 வயதுக்குட்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக டிங்கி படகுகளுடன் சந்தேகநபர்கள், தலைமன்னார் பொலிஸார் மற்றும் மன்னார் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## நிவாரண திட்டங்கள் குறித்து பிரதமர் எடுத்துரைப்பு

மேலும் இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான நிவாரண திட்டங்கள் குறித்தும் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனுக்கு பிரதமர் எடுத்துரைத்தார்.

பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி பணிப்பாளர் பி.கே.ஜி ஹர்ச்சந்திர ஆகியோரும் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இரண்டாவது கடன் தவணை எப்போது கிடைக்கும் என தன்னால் உறுதியாகக் கூற முடியாது எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

## முட்டை இறக்குமதி டிசெம்பர் வரை அவசியம்

இலங்கைக்கு முட்டை மற்றும் அரிசி இறக்குமதி செய்யப்பட்டாலும் குறைந்த அளவு அரிசி மற்றும் முட்டையே ஏற்றுமதி செய்யப்படுவதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். சந்தையில் கொள்வனவு செய்பவர்களை பாதுகாக்கும் நோக்கில் இது மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## வங்கிகள் மீது நடவடிக்கை



அதற்கமைய, இதுவரை வங்கி வட்டி வீதங்களைக் குறைக்காத வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பில் மத்திய வங்கி அவதானம் செலுத்தும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அவிசாவளை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் வங்கி வட்டி விகிதங்கள் உயர் மட்டத்தில் இருந்த போது பெறப்பட்ட நீண்ட கால வைப்புகளுக்கு வட்டி செலுத்துவதில் வர்த்தக வங்கிகளும் சில சிக்கல் நிலைமைகளை எதிர்நோக்க நேரிட்டதாக அமைச்சர் கூறியுள்ளார்.

## ஆழ்கடலில் ஐவர் கைது

அரச புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த படகுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஐந்து மீனவர்களும் திக்கோவிட்ட துறைமுகத்துக்குக் அழைத்து வரப்படுள்ளனர் என கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 10 மாதங்களில் 400 யானைகள் மரணம்

யானை - மனித மோதலினால் சுமார் 200 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார குறிப்பிட்டுள்ளார்.

பல காட்டு யானைகள் துப்பாக்கிச் சூடு மற்றும் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளதுடன் வெவ்வேறு நோய்களாலும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் 6,000 யானைகளே இருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மனித நடவடிக்கைகளின் காரணமாக வசிப்பிடங்களை இழந்துள்ள காட்டு யானைகள் கிராமங்களுக்குள் ஊடுருவும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ‘ஷொக்’ கொடுக்காத ஒரே தலைவர் மஹிந்த

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டது.

இந்த நாட்டில் மக்களுக்கு மின்சாரம் வழங்கியது மட்டுமன்றி மின்சார கட்டணத்தையும் குறைத்தவர் மஹிந்த ராஜபக்ஷ எனவும் எனவும் காரியவசம் தெரிவித்துள்ளார்.

## போதைப்பொருளை தடுக்க புதிய கட்டளை நிறுவனம்

அண்மையில் கைப்பற்றப்பட்ட 4 பில்லியன் ரூபாய் பெறுமதியான 200 கிலோ கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளைக் கொழும்பு துறைமுகத்தில் செவ்வாய்க்கிழமை 24) மேற்பார்வை செய்ததன் பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை கடற்படையினர் மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் இணைந்து மேற்கொண்ட முன்னெடுப்பின் ஊடாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இலங்கையின் கடற்கரை பாதுகாப்பு கப்பல்களைப் பயன்படுத்தி காலியின் மேற்குப் பகுதியில் 91 கடல் மைல் (168 கி.மீ) தொலைவில் ஆள் கடல் பரப்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி போதைப்பொருள் கட்டளை நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் நாட்களில் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாட்டிற்குள் கொண்டுவரப்படும் போதைப்பொருட்களில் 65% இனை மட்டுமே தடுக்க முடிவதாகவும் ஏனைய 35% போதைப்பொருட்கள் நாட்டிற்குள் கொண்டு வரப்படுவதாகவும் சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, போதைப்பொருள் கொண்டுவரப்படுவதை முற்றாக தடுப்பதற்கான கடல்சார் வேலைத்திட்டம் ஒன்றின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த சாகல ரத்நாயக்க,

200 கிலோ கிராம் அளவான பாரிய தொகை ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளமைக்கு கடற்படை தளபதி உள்ளிட்ட படையினருக்கும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தினருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

கடந்த நாட்களில் இவ்வாறான பாரிய தொகையான போதைப்பொருள் இரண்டாவது தடவையாக மீட்கப்பட்டுள்ளது. முதல் தடவையும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தின் தகவலுக்கமையவே சுற்றிவளைப்புச் செய்யப்பட்டது.

அரச புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலுக்கமைய கடற்படையினரால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. போதைப்பொருள் வலையமைப்புக்கள் உலக அளவில் வியாபித்துள்ளன. அதிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான பல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

**“ போதைப்பொருள் வியாபாரத்திற்கு இணையாக ஆயுத விற்பனையும் இடம்பெறுகிறது. அது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதனால் தேசியப் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். அதற்கான புதிய சட்டங்களைக் கொண்டுவர வேண்டிய அவசியம் என்பதுடன் அதற்கான புதிய போதைப்பொருள் தடுப்பு கட்டளை நிறுவனமொன்று நிறுவப்படும்.**

கடற்படை, பொலிஸ் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறான நடவடிக்கையின் மூலம் 65 சதவீத போதைப்பொருள் மாத்திரமே மீட்கப்படுவதோடு, ஏனைய 35 சதவீதமான போதைப்பொருள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுகின்றது.

தற்போதுள்ள தகவல்களுக்கமைய பெரிய கப்பல்களில் சர்வதேச எல்லைக்குள் போதைப்பொருள் கொண்டுவரப்படும் அதேநேரம், சிறிய படகுகள் ஊடாக நாட்டிற்குள் அனுப்பப்படுவதோடு போதைப்பொருள் வலையமைப்பும் பெருமளவில் வியாபிக்கிறது.

போதைப்பொருள் வியாபாரத்திற்கு இணையாக ஆயுத விற்பனையும் இடம்பெறுகிறது. அது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதனால் தேசியப் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். அதற்கான புதிய சட்டங்களைக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கான புதிய போதைப்பொருள் தடுப்பு கட்டளை நிறுவனமொன்று நிறுவப்படும். அதற்கான சட்டம் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதனை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்றும் தெரிவித்தார்.

# இலட்ச கணக்கில் மோசடி: இராணுவ மேஜர் கைது

அமெரிக்காவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி தனது மனைவியுடன் இணைந்து சுமார் 42 இலட்சம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் இராணுவ மேஜர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை கோரக்கன பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேக நபரான மேஜர் யாழ்ப்பாணம் முகமாலை பகுதியில் உள்ள முகாமில் பணியாற்றும் இலங்கை தேசிய பாதுகாப்பு படையின் அதிகாரி என பொலிஸார் கூறியுள்ளனர்.

**பல்வேறு நபர்களிடம் இருந்து பெற்ற பணத்தை இராணுவ மேஜர் தனது மனைவி கணக்கில் வரவு வைத்துள்ளமை தெரிய வந்துள்ளது**

பாணந்துறை வடக்கு பொலிஸாருக்கு கிடைத்த 4 முறைப்பாடுகளின் அடிப்படையிலும், தெஹிவளை, கல்கிசை உட்பட பல பொலிஸ் நிலையங்களுக்கு கிடைத்த பல முறைப்பாடுகளின் அடிப்படையிலும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் கடந்த 10ஆம் திகதி விடுமுறையில் வீடு திரும்பியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பல்வேறு நபர்களிடம் இருந்து பெற்ற பணத்தை மேஜர் தனது மனைவி கணக்கில் வரவு வைத்துள்ளது தெரிய வந்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடு மோகத்தால் பணத்தை இழந்தவர்கள்

# சாணக்கியனிடம் முறைப்பாடு

பாறுக் ஷிஹான்



மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வெளிநாடு மோகத்தினால் பணத்தை இழந்துள்ளதாக குறிப்பிட்டு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனிடம் முறைப்பாடு அளித்துள்ளனர்.

முகவர்களின் ஆசைகளை நம்பி சுமார் 8 கோடி ரூபாவினை இழந்துள்ளதாகவும் தற்போது நிர்க்கதிக்குள்ளான எம்மை காப்பாற்றுமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினரிடம் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பகுதியில் அமைந்துள்ள அலுவலகத்திற்குத் திங்கட்கிழமை (23) மாலை வந்திருந்த பணத்தை இழந்தவர்கள் சுமார் பல மணித்தியாலங்கள் பாராளுமன்ற உறுப்பினரைச் சந்தித்து தத்தமது பிரச்சினைகளை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பில் சாணக்கியன் கருத்துரைக்கையில்,

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு என கூறி 185 பேரிடம் 8 கோடிகளுக்கு அதிகமாக அரச உத்தியோகத்தில் உள்ள சிலரால் மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு உடந்தையாகப் பாடசாலை மாணவன் ஒருவரும் உள்ளடங்குவதாக அறிகின்றேன். தற்போது இவ்விடயம் தொடர்பில் 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸாரினால் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிகின்றேன்.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கலந்துரையாடினேன். பாதிக்கப்பட்ட மக்கள் இதற்கான உரிய நீதியினை பெற்றுத் தரும்படி எனது அலுவலகத்தில் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர். இவ்வாறான மோசடிகள் அதிகளவாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஏமாற்றுக்காரர்களிடமிருந்து மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும் என தெரிவித்துள்ளார்.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் 188 பேரைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இதில் 146 பேர் டுபாய் நாட்டிற்கும் டென்மார்க் நாட்டிற்கு 20 பேரும் தாய்லாந்து நாட்டிற்கு 22 பேரும் உள்ளடங்குகின்றனர்.

அத்துடன் டுபாய் நாட்டிற்குச் செல்பவர்களிடம் 350,000 ரூபாவும் டென்மார் நாட்டிற்குச் செல்பவர்களிடம் 550,000 ரூபாவும் தாய்லாந்து நாட்டிற்கு செல்பவர்களிடம் 4 முதல் 5 இலட்சம் வரை பணம் வாங்கியுள்ளனர். மொத்தமாக 188 பேரிடம் அண்ணளவாக 7 அரை கோடி ரூபாவினை மோசடி செய்துள்ளனர் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளர்.



# மண்ணெண்ணெய் இலவசமாக விநியோகம்

பு.கஜிந்தன்

சீன அரசாங்கத்தினால் நன்கொடை மூலம் கிடைக்கப்பெற்ற மண்ணெண்ணெய், வேலணை - புங்குடுதீவு கடற்றொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கி திங்கட்கிழமை (23) வைக்கப்பட்டுள்ளது.

**முதற்கட்டமாக 75 லீற்றர் வீதமும் இரண்டாம் கட்டமாக 78 லீற்றர் என்ற அடிப்படையிலும் மண்ணெண்ணெய் வழங்கி வைக்கப்பட்டது**

இதன்போது கடற்றொழிலாளர்களுக்கு முதற்கட்டமாக 75 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டதோடு, அதன் தொடர்ச்சியாக செவ்வாய்க்கிழமை 24ஆம் திகதியும் இரண்டாம் கட்டமாக 78 லீற்றர் என்ற அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 21 ஆலயங்களில் கொள்ளையிட்டவர் கைது

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்குச் சொந்தமான 21 இந்து ஆலயங்களுக்குள் நுழைந்து கொள்ளையடித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரால், கொள்ளையடித்துத் தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

நுவரெலியா பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை (22) கைது செய்யப்பட்ட சந்தேகநபர், நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஞாயிற்றுக்கிழமை (23) ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அவரை நவம்பர் 3ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா நீதவான் குஷிகா குமாரசிறி உத்தரவிட்டுள்ளார்.

நுவரெலியா -அம்பேவெல வத்த, பொரகாஸ் பகுதியைச் சேர்ந்த முத்துசாமி ரகுநாதன் (வயது 43) என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட தங்கப் பொருட்களைக் கொள்வனவு செய்த தலவாக்கலை பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும் கைது செய்யப்பட்டு சந்தேகநபருடன் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

பிரதான சந்தேகநபரிடமிருந்து தங்கப் பொருட்களைக் கொள்வனவு செய்த இருவரையும் தலா இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க உத்தரவிட்ட நீதவான், சந்தேக நபர்கள் இருவரையும் நவம்பர் 3ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார்.

பாதுகாப்பு கெமராக்களில் பதிவான காட்சிகளை வைத்து விசாரணைகளை மேற்கொண்ட நுவரெலியா பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், பிரதான சந்தேக நபரைக் கைது செய்தனர். பிரதான சந்தேக நபர்






போதைப்பொருளுக்கு அடிமையானவர் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


தலவாக்கலை, இராகலை, ஹைஃபோரஸ்ட், லிதுல, ஹட்டன், பொகவந்தலாவ, நானுஓயா, உடப்புஸ்ஸல்லாவ, வெலிமடை, கெப்பட்டிபொல, மாத்தளை, கம்பளை, நாவலப்பிட்டி ஆகிய பொலிஸ் எல்லைக்குட்பட்ட 21 இந்து ஆலயங்களில் சந்தேக நபர் புகுந்து கொள்ளையடித்துள்ளார். மற்றும் பணம் மற்றும் தங்க நகைகள் திருடியுள்ளார் என்பதும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.



# சக்கரகதிரை வழங்கி வைப்பு

எப்.முபாரக்

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் சமூக சேவைகள் பிரிவின் ஏற்பாட்டில் வெருகல் பிரதேச செயலக பிரிவின் பூமரத்தடி சேனை கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் வறிய குடும்பமொன்றில் வாழும் மூன்று மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர கதிரை திங்கட்கிழமை (23) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.




# இணையதளம் அங்குரார்ப்பணம்

நூருல் ஹுதா உமர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகபூர்வ இணையதளம் திங்கட்கிழமை (23) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் சுகாதார தகவல் முகாமைத்துவப் பிரிவு குறித்த இணையதளத்தினை வடிவமைத்து அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வினை ஒருங்கிணைப்பு செய்திருந்தது.

**கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் சுகாதார தகவல் முகாமைத்துவப் பிரிவு குறித்த இணையதளத்தினை வடிவமைத்து அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது**

இந்நிகழ்வில் பிரிவுத் தலைவர்கள், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர் உள்ளிட்ட பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



# வித்தியாரம்பம்

விஜயதசமி நாளில் காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில், பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் வித்தியாரம்பம் நடைபெற்றது.





# தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகள் மீட்பு



மு.தமிழ்ச்செல்வன்

வவுனிக்குளத்தில் 15 இலட்சம் பெருமதியான சட்டவிரோத தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. முல்லைதீவு - வவுனிக்குளதில் கிளிநொச்சி பிராந்திய தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையினர் செவ்வாய்க்கிழமை (24) அதிகாலை மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பிராந்திய தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குமாரகுலசிங்கம் சங்கீதன் கூறியதாவது,

**தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நீர் நிலைகள் பாதிப்படைகின்றன. எனவே மீனவர்கள் பெருமளவு தொகை நிதியினை செலவு செய்து இந்த வலைகளைப் பயன்படுத்துவதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

இவ்வாறான தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்வதன் மூலம் சுற்றுச் சூழலுக்கு மட்டுமன்றி நன்னீர் மீன் வளங்கள் உட்பட நீர் நிலைகளின் சூழலும் பாதிப்படைகின்றன.

எனவே, மீனவர்கள் பெருமளவு தொகை நிதியினை செலவு செய்து தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தித் தொழல் நடவடிக்கையில் ஈடுபடுவதனை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன், கைப்பற்ற வலைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# 36ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு

பாறுக் ஷிஹான்

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பகுதியில் 11 பேர் படுகொலை செய்யப்பட்டு 36ஆவது நினைவு தினம் திங்கட்கிழமை (23) திகதி உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மற்றும் பிரத்தியேக செயலாளர் விமலநாதன் மதிமேனன் தலைமையில் ஆரம்பமானதுடன், உயிரிழந்தவர்களின் நினைவிடத்தில் அவர்களின் உறவினர்கள் மற்றும் இரா. சாணக்கியன் ஆகியோர் மெழுகுதிரிகளை ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தியுள்ளனர்.



# போதைப்பொருள்களால் கேள்விக்குறியாகும் நாட்டின் எதிர்காலம்

தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலம் எவ்வாறு இருக்கப்போகிறதோ? என நினைத்து, நினைத்து கவலைப் பட்டுக்கொண்டிருக்கும் பெற்றோர்களின் வயிற்றில் நெருப்பை கொட்டுவதைப் போலவே, போதைப்பொருள்களை கைப்பற்றுதல் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

தங்களுடைய பிள்ளைகளின் பின்னால் எந்நேரமும் நின்றுக்கொண்டிருக்க முடியாதென நினைக்கும் பெற்றோர்களே இவ்வாறு சிந்திக்கின்றனர். ஏனெனில் காலம் கெட்டுக்கிடக்கிறது. ஒருசில வயதில் வழித் தவறிவிட்டார்கள் எனில், அவர்களை அதிலிருந்து நல்வழிப்படுத்துவது என்பது கடும் சிரமமான காரியமாகும் என்பதை செய்திகள் ஊடாக அறிந்து வைத்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் முதல், பல்கலைக்கழக மாணவர்கள் வரையிலும் பல கெட்டப்பழக்கங்கள் வியாபித்து இருக்கின்றன. இதற்கிடையே பாடசாலைகளில் இருந்து இடைவிலகியோர், சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னர் அடுத்தக்கட்டம் தொடர்பில் சிந்திக்காதவர்கள், இவ்வாறான கெட்டப்பழகத்தை விரைவாக வழக்கமாக்கிக்கொள்கின்றனர்.

நகர் புறங்களை பொருத்தவரையில், காலாசாரம் மாறிவிட்டமையால், போதைப்பொருள் பழக்கம் சர்வசாதாரணமாகிவிட்டது எனலாம். அந்தளவுக்கு மிகவும் செறிவான போதைப்பொருட்கள் இலகுவில் கிடைக்கின்றன. எனினும், பொலிஸாரின் சுற்றிவளைப்புத் தேடுதலும் கைது செய்யும் நடவடிக்கைகளுக்கும் குறைவில்லை. அன்றாடம் நடைபெறுகின்றது.

எனினும், கடந்த இரண்டொரு வாரங்களுக்குள் போதைப்பொருள் கைப்பற்றல் வகைதொகையின்றி அதிகரித்துள்ளன. கிராம் அல்ல நூறு, இருநூறு கிலோகிராம் என போதைப்பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன. அவற்றுடன் சிக்குவோருக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்துக்கொண்டு அவற்றை உடனடியாக அழிப்பதற்கு வழிசமைக்கவேண்டும்.

இல்லையேல், மீண்டும் சமூகத்துக்குள் அவை விற்பனைச் செய்யப்படலாம். ஏனெனில், நீதிமன்ற களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டிருந்த இவ்வாறான வழக்கு தொடர்பிலான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. அத்துடன் களஞ்சியசாலைகள் உடைக்கப்பட்டுள்ளன. கைப்பற்றிய முழுத்தொகையையும் நீதிமன்றத்தில் சான்றுப்பொருளாக சமர்ப்பிப்பதற்கு பொலிஸார் தவறியிருந்த சம்பவங்களும் ஏராளம்.

போதைப்பொருளை கடத்தும் மத்திய நிலையமாக இலங்கை இருக்கின்றதா? என்றக் கேள்வி இன்று, நேற்று எழுந்தது ஒன்றல்ல. நீண்டகாலமாகவே இருக்கின்றது. இந்நிலையில்தான், பெருந்தொகையான போதைப்பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன. அவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே நாட்டின் மீதும், எதிர்கால சந்ததியினர் மீதும் அக்கறைக்கொண்டிருப்போரின் வேண்டுகோளாகும்.

ஒருவகையான பேனைகளுக்குள் வைத்தும் போதைப்பொருள் விற்பனைச் செய்யப்படுகின்றன என சமூக வலைத்தளங்களில் பதிவிடப்பட்டிருந்தன. இதற்கிடையே ஆங்கில புத்தகங்களின் அட்டைக்குள் மறைத்துவைத்து, நாட்டுக்குள் கடத்தமுயன்ற அதிசக்திவாய்ந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனை கடத்திய வெளிநாட்டு பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழ்Mirror க்கு
www.tamilmirror.lk
எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பெரும் பசியைவிட மனம் களைத்துப் போவதே கடினமானது. அதை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரமும் எடுக்கின்றது.

எல்லோரது நெஞ்சமும் அடிக்கடி சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாறுவதுண்டு. சிலவேளை நகைப்பார்கள் சிலசமயம் வேலைப்பழுவால் எரிச்சல்படுவார்கள். குழந்தைகளை ஆர்வத்துடன், அணைக்கும்போது சந்தோச சாகரத்தில் மூழ்கிவிடுவார்கள். உணர்ச்சிக்கு மனிதன் அடிமையாகின்றான்.

ஆர்வத்துடன் பணி செய்பவர்கள், திடீர்ரெனக் கிடைக்கும் அதிர்ச்சித் தகவல்களால், தங்கள் நிலை மறந்துவிடுகின்றனர். அவை சந்தோசமானவையாகவும் இருக்கலாம். துன்பமான செய்தி கேட்ட மனம், பலம் இழந்துவிடுகின்றது.

முரண்பாடான மாறு நிலை வாழ்க்கையில் இயல்பானது என்பார்கள். கட்டுப்படுத்தும் நிலையை, பொறுமையுடன் உருவாக்குக!

இந்நிலையில் இருந்து விடுபடுவது எப்படி? எங்களால் எல்லாச் சந்தர்ப்பத்திலும் தன்னிலை ஏற்காமல் இருந்து, தங்களைச் சுவீகரிக்க மன ஒடுக்கம் முக்கியமானது.

தியானம், சிந்தனைகளைத் தெளவூட்டும். எதையும் அதிர்வுடன் நோக்காமல், சாந்தமான நிலையில் நோக்குவதற்குக் கொண்டுவந்துவிடும். தனிமை தேவையானது. அமைதியை ஊட்டுகின்றது.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

# விளையாட்டாக மாறிய தேர்தல் சட்ட திருத்தம்



எம்.எஸ்.எம். ஐயூப்

முன்னைய அரசாங்கங்களைப் போலவே இந்த அரசாங்கமும் அரசியலமைப்பை திருத்தவும் தேர்தல் சட்டங்களைத் திருத்தவும் முயன்று வருகிறது. இந்த இரண்டு விடயங்களும் சிறுபான்மை மக்களுக்கு மிகவும் முக்கியமானவையாகும். ஏனெனில் இந்த இரண்டின் மூலமும் சிறுபான்மையினரின் அரசியல் பலத்தை குறைக்கலாம்.

ஜனாதிபதி கோட்டாபய 2020இல் புதிய அரசியலமைப்பொன்றை வரைவதற்கான ஆலோசனைகளை பரிந்துரைப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவின் தலைமையில் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர்கள் குழுவொன்றை நியமித்தார். அக்குழு தமது அறிக்கையை கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபயவிடம் கையளித்தது.

அந்த அறிக்கையில் சில விடயங்கள் சிறுபான்மை மக்களை மோசமாகப் பாதிப்பதால் தாம் அவ்விடயங்களை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான கலாநிதி ஏ.சர்வேஸ்வரன் அண்மையில் தமிழ் ஊடகங்களிடம் கூறியிருந்தார்.

அதேவேளை, தற்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கலப்பு தேர்தல் முறையானது 2001இல் தினேஷ் குணவர்தன தலைமையில் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றினால் பரிந்துரைக்கப்பட்டதாகும். சிறுபான்மை மக்களும் பொதுவாகக் கலப்புத் தேர்தல் முறையை ஏற்றுக் கொண்ட போதிலும் அதன் நடைமுறையைப் பற்றி சிறுபான்மையினரிடம் அச்சம் இருப்பதும் பொதுவாக அறியப்பட்ட விடயமாகும். ஜனாதிபதி ரணிலும் தேர்தல் சட்டங்களில் கொண்டுவரப்பட வேண்டிய மாற்றங்களைப் பரிந்துரைப்பதற்காக முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையில் கடந்த 16ஆம் திகதி ஒன்பது பேர் கொண்ட ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.

சுந்தரம் அருமைநாயகம், சேனாநாயக்க அலிசந்தரலாகே, நலின் ஜயந்த அபேசேகர, கிறிஸ்டோபர் சேனாரத்ன பெரேரா, அஹ்மத் லெப்பை முஹம்மத் சலீம், சாகரிக்கா தெல்கொட, எஸ்தர் சிறியானி நிமல்கா பெர்னாண்டோ மற்றும் தீபானி சமந்தா ரொட்ரிகோ ஆகியோர் அக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

வழமையாக இது போன்ற குழுக்கள் நியமிக்கப்படும் போது ஒரு விடயத்தைக் குறிப்பிட்டு அது தொடர்பாக ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யுங்கள் என்றே அவற்றை நியமிப்பவர் அக்குழுக்களின் நியமனத்தைக் குறிக்கும் வர்த்தமானியில் குறிப்பிடுவார். ஆனால் இக்குழுவை நியமித்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் பரிந்துரைக்கப்பட வேண்டிய விடயங்களையும் ஜனாதிபதியே குறிப்பிட்டுள்ளார்.

உதாரணமாக, ஒருவர் பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகிய மக்கள் பிரதிநிதிகள் சபைகளில் இரண்டு சபைகளில் ஒரே காலத்தில் அங்கம் வகிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தொகுதிவாரி மற்றும் விகிதாசார தேர்தல் முறைகளின் கலப்பு முறையொன்றுக்கான பொருத்தமான பொறிமுறையொன்றை தயாரிக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவர் ஒரே காலத்தில் இரண்டு மக்கள் பிரதிநிதிகள் சபைகளில் அங்கம் வகிப்பது சரியா இல்லையா என்பதை முடிவு செய்து சிபாரிசு செய்வது அந்த வாணைக் குழுவின் பொறுப்பாகும். ஆனால் அது பிழையாக இருந்தாலும் அதற்கு செயலுருவம் கொடுக்க ஆணைக்குழு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றே ஜனாதிபதி அக்குழுவுக்குக் கட்டளையிட்டு இருக்கிறார். அதாவது ஜனாதிபதியின் கருத்துக்கள் இதில் திணிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி இந்த வர்த்தமானியை வெளியிட்டு இரண்டு நாட்களில், அதாவது கடந்த புதன்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்ற தேர்தல் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்காகவென பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் கூட்டமொன்றைக் கூட்டியிருந்தார். அரசாங்கம் பாராளுமன்ற தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கிலேயே இத்தருணத்தில் இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் புதன்கிழமையே பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது குற்றஞ்சாட்டி தமது கட்சி அக்கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என்று கூறினார். ஆனால், அவரது கட்டி அன்று அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது.

மனோ தலைமை தாங்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணி, ரிஷாத் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, டலஸ் அலகப்பெருமவின் குழு ஆகியனவும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டன. எனினும் இவ்வித இணக்கப்பாடுமின்றியே கூட்டம் முடிவடைந்தது.

அரசாங்கம் தேர்தல்களை நடத்த விருப்பம் இல்லை என்பது தெளிவாகத் தெரியும் இந்தத் தருணத்தில் அரசாங்கம் ஏன் தேர்தல் சட்டங்களைத் திருத்த முற்படுகிறது என்பது சிறு பிள்ளைக்கும் விளங்கும் விடயமாகும். ஆயினும் அதற்காக ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு இருக்கும் நிலையில், பிரதமர் ஏன் இந்தக் கூட்டத்தைக் கூட்டினார் என்பது விளங்காத விடயமாகவே இருக்கிறது.

அந்தக் கூட்டத்தின்போது, பாராளுமன்ற தேர்தல் சட்டம் தொடர்பாக ஏதாவது இணக்கம் ஏற்பட்டு இருந்தால் அதனை ஆணைக்குழுவுக்கு அறிவிக்க அரசாங்கத்திடம் ஏதாவது ஏற்பாடு இருந்ததாகவும் தெரியவில்லை. அவ்வாறு அறிவித்தால் ஆணைக்குழு பாராளுமன்ற தேர்தலைக் கைவிட்டு மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டங்களைத் திருத்த நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வாறு அறிவிக்காமல் இருந்து ஆணைக்குழு பாராளுமன்ற தேர்தல் சட்டங்கள் தொடர்பாக வேறு முடிவை எடுத்தால் நடைமுறைப்படுத்துவது ஆணைக்குழுவின் முடிவையா அல்லது மேற்படி கூட்டத்தில் எட்டிய இணக்கப்பாட்டையா? பிரதமரின் கூட்டத்தில் எவ்வித இணக்கமும் ஏற்படாததால் இப்போதைக்கு அவ்வாறான சிக்கல் எதுவும் ஏற்படாது.

பிரதமர் இந்தக் கூட்டத்தைக் கூட்டப் போவதை ஜனாதிபதிக்குத் தெரியாதா? அவ்வாறு ஜனாதிபதிக்குத் தெரியாமல் இது போன்ற பாரதூரமானதோர் விடயத்தைப் பற்றி கூட்டமொன்றைக் கூட்டும் அளவுக்கு தினேஷ் குணவர்தனவிடம் தைரியம் இருக்கும் என்று நம்ப முடியாது. உண்மையிலேயே ஜனாதிபதி பணித்தாலன்றி அவர் இது போன்றதோர் கூட்டத்தைக் கூட்டியிருக்கவே மாட்டார். எனவே ஆணைக்குழுவுக்கு புறம்பாகப் பிரதமரும் தேர்தல் சட்டத்தை மாற்றக் கூட்டம் கூட்டியதன் அர்த்தத்தை ஜனாதிபதிக்கு மட்டுமே தான் தெரிந்திருக்க முடியும்.

தேர்தல் சட்டங்களின், குறிப்பாகப் பாராளுமன்ற தேர்தல் சட்டங்களின் அடிப்படை அரசியலமைப்பிலேயே இருக்கிறது. விகிதாசார தேர்தல் முறை, விருப்ப வாக்கு முறை மற்றும் தேசிய பட்டியல் ஆகியன அரசியலமைப்பின் பிரமானங்களாகும். எனவே தற்போதைய நிலையில் அரசியலமைப்பையும் தேர்தல் சட்டங்களையும் பிரிக்க முடியாது. அவ்வாறு இருக்க, கோட்டாபய மற்றும் ரணில் ஆகிய இரண்டு ஜனாதிபதிகளினது அரசாங்கங்களும் இவ்விரண்டு விடயத்தைப் பிரித்தே சட்ட மாற்றங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளன.

கோட்டா பதிய அரசியலமைப்பொன்றை வரைவதற்கான பூர்வாங்க ஆலோசனைகளைப் பரிந்துரை செய்வதற்காக 2020 செப்டெம்பர் 3இல் ஜனாதிபதி சட்டத்தரணி ரெமேஷ் டி சில்வாவின் தலைமையில் நிபுணர்கள் குழுலொகன்றை நியமித்தார். அதனையடுத்து, தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்கென 2021 ஏப்ரல் 5ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின்படி அப்போது அமைச்சராக இருந்த தினேஷ் குணவர்தனவின் தலைமையில் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

ரணிலும் கடந்த வருடம் ஒகஸ்ட் 3ஆம் திகதி புதிய பாராளுமன்ற அமர்வைத் திறந்து வைத்து முன்வைத்த கொள்கை அறிக்கையில் புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பது அராங்கததின் முதன்மையான கடமைகளில் ஒன்றாகும் என்று குறிப்பிட்டார். அவரே தான் இப்போது தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்காக ஆணைக்குழுலொன்றை நியமித்து இருக்கிறார். புதிய தேர்தல் சட்டங்கள் உள்ளிட்ட அரசியலமைப்பொன்றைத் தயாரிக்கத் தாம் 2016இல் நியமித்த குழுக்களின் பிரதான குழுவின் அறிக்கை இன்னமும் செல்லுபடியாகும் என்றும் அவர் அண்மையில் குறிப்பிட்டு இருந்தார். பிரச்சினைகளின் பின்புலத்தை ஆராயாமல் அந்தந்த நேரத்துக்கு நினைத்ததைச் செய்கிறார்கள் என்பதே இதன் மூலம் தெரிகிறது.

கடந்த வருடம் ஜனாதிபதி ரணிலின் அரசியல் பலமானது ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியேயாகும். அம்முன்னணி தலைமையிலான அரசாங்கமே 2020 ஓகஸ்ட் மாதம் முதல் நாட்டில் இருக்கிறது.

## கடிதங்கள்



### குமுதினி நின்றது

யாழில் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டு வந்த குமுதினி படகு திருத்தியமைக்கப்பட்ட போதும், மீளவும் பழுதடைந்த நிலையில், மாவிலித்துறையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ். நெடுந்தீவு - குறிகாட்டுவானுக்கான கடல்வழிப் போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான குமுதினி படகு மற்றும் வடதாரகை ஆகிய இரு படகுகளும் பழுதடைந்த நிலையில், கடந்த ஒரு வாரக் காலமாக நெடுந்தீவு மாவிலித்துறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

குமுதினி படகு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாகப் பழுதடைந்த நிலையில், ஒரு கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டுக் கடந்த ஒகஸ்ட் மாதம் 24 முதல் போக்குவரத்து சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த படகானது மீளவும் பழுதடைந்து நெடுந்தீவு மாவிலித்துறையில் தரித்திருக்கின்றது. இதேபோன்று வடதாரகை படகும் பழுதடைந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்காக ஈடுபடுத்தப்பட்டு வருகின்ற இரண்டு படகுகளும் பழுதடைந்துள்ளதால் நெடுந்தீவு மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.




# உயிரற்ற உடலாக நிற்கும் யாழ். பொது நூலகம்



ஞா.மைக்கல் பெவன்
ஊடகக்கற்கைகள்
2ஆம் வருடம்
யாழ்.பல்கலைக்கழகம்

தென் கிழக்கு ஆசியாவில் முதன்மையான பொது நூலகமாக விளங்கியதும் உலகின் வேறு எந்த நூலகத்திலும் காணக் கிடைக்காத ஈழத்து தமிழ் புலமையாளர்கள் சேர்ந்து உருவாக்கிய தமிழ் மரபையும் வரலாற்றையும் ஆவணப்படுத்தி வைத்திருக்கும் ஒரு தொல்பொருள் வைப்பகமாக யாழ்ப்பாண நூலகம் இருந்து வந்தது. ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அதன் சுவடுகளை முதலில் அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் புலமை சொத்தாகக் கருதப்பட்டு வந்த யாழ் நூலகம் எரிந்து சாம்பலாக்கப்பட்ட சம்பவம் வரலாற்றில் என்றுமே துடைக்க முடியாத கரையாகப் பதியப்பட்டு இருக்கின்றது. இலங்கையில் இனப் பிரச்சனையானது மற்றுமொரு பரிணாமத்திற்கு இட்டுச்செல்வதற்கு யாழ் நூலக எரிப்பு காரணமாக அமைந்தது என்றும் கூறலாம்.

யாழ். நூலகம் உருவாகுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் அச்சுவேலியைச் சேர்ந்த யாழ்ப்பாண நீதிமன்றத்தில் காரியதரிசி கே.எம்.செல்லப்பா ஆவார. 1933ஆம் ஆண்டு தனது வீட்டில் சில நூல்களுடன் இவர் நடத்தி வந்த நூல் நிலையம் இன்று விசாலமாக வளர்ந்துள்ளது. இதனைப் பலருக்கும் பயன்படும் வகையில் 1934ஆம் ஆண்டு ஆவணி மாதம் 9ஆம் திகதி தம்பையா தலைமையில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்நூலகத்தின் தோற்றத்திற்கான அடிக்கோடு இடப்பட்டது. இக்கூட்டத்தில் காரியதரிசி கே.எம்.செல்லப்பா அவர்கள் சிரமப்பட்டுத் திரட்டிய 184 ருபாய் 22 சதமானது பொது நூலகத்திற்கான மூலதனமாய் அமைந்தது. அன்றைய காலத்தில் அது ஒரு பெரிய மூலதனமாய் இருந்தது. முதலில் ஆஸ்பத்திரி வீதியில் வாடகை அறையொன்றில் 844 நூல்களுடனும் 36 பருவ வெளியீடுகளுடனும் 1934இல் ஆவணி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த பொது நூலகம் 1935ஆம் ஆண்டு வசதியின்றி கைவிடப்பட்டபோது அதனை யாழ்ப்பாண கட்டட சபை பொறுப்பேற்று இடம் மாற்றம் செய்தது. பின்னர் 1952ஆம் ஆண்டு சாமி சபாபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஒரு மகாநாட்டினை அடுத்து சகலவித வசதிகளையும் கொண்ட நவீன பொது நூலக கட்டிடம் ஒன்றினை அமைப்பதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டது.

அத்தோடு இந்த கட்டிடத்தின் அமைப்பானது தமிழ் மக்களிடையே போற்றப்படும் வகையில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இதன் காரணமாக நூலக துறையில் நிபுணத்துவம் வாய்ந்த கலாநிதி ரங்கநாதன் மற்றும் சென்னை அரசின் கட்டடக்கலை நிபுணர் ம. நரசிம்மர் அவர்கள் வரை படங்களைத் தயாரித்து உதவி இருந்தார். கட்டட அடிக்கல் நாட்டு விழா 1953இல் பங்குனி 29 இல் நடைபெற்றது. புது நூலகத்தின் முதல் கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டு 1959ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 திகதி அன்று முன்னாள் முதல்வராக இருந்த 'துரையப்பா' என்பவரால் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நூலகத்தின் ஏனைய கட்டிடங்களும் பூர்த்தி செய்யப்பட்டன. பூரணத்துவம் பெற்ற இந்த நூலகத்தில் நூலகர் உட்பட 33 ஊழியர்கள் கடமையாற்றி வந்தார்கள்.

மேலும் 1967ஆம் ஆண்டு 'குழந்தைகளுக்கான பகுதி' எனத் தனியான பகுதி ஒன்று ஆரம்பிக்கப்படுகின்றது. இவற்றுள் சிறுவர்களின் ஆளுமையை விருத்தி செய்யக்கூடிய நூல்கள் வைக்கப்பட்டன. அத்தோடு 1971ஆம் ஆண்டு நிகழ்வரங்கம் என்ற ஒன்றும் அமைக்கப்படுகின்றது. இங்குத் தமிழ் இலக்கியம் சார்ந்து நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. சிறுவர் முதல் வயோதிபர் வரையிலும் இந்த நூலகம் சார்ந்த சிந்தனையை ஏற்படுத்துவதில் இந் நிகழ்வரங்கம் முக்கிய பங்கு வகித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

'சத்தம் இன்றி இரத்தம் இன்றி யுத்தம் செய்யும் போர்க்களம் நூலகம்' என்ற கார்ல்மாக்ஸின் வரிகளைப் பொய்யாக மாற்றும் வகையில் இன்றுவரை ஆசியாவின் மிக மோசமான இன நூல் அழிப்பில் ஒன்றாகக் கருதப்படும் சம்பவம் இலங்கையில் அரங்கேற்றப்பட்டது. ஒட்டுமொத்த தமிழ் மக்களின் அடையாளமாகப் போற்றப்பட்ட இந்நூலகமானது இலங்கை உள்நாட்டுப் போரின் ஆரம்பகாலத்தில் 1981இல் மே மாதம் 31ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் எரியூட்டப்பட்டது.

இவ்வாறு புலமை சொத்துக்களுடன் பல்லாயிரக்கணக்கானோரை உருவாக்கிய நூலகம் எரிந்து கொண்டிருந்ததை 74 வயதுடைய யாழ் பன்மொழிப் புலவரான தாவீது அடிகள் இதனைத் தனது வீட்டு மாடியில் இருந்து கண்ணுற்று அதிர்ச்சியில் மாரடைப்பில் உயிரிழந்தார். எனவும் கூறப்படுகின்றது.

குறித்த நூலக எரிப்பின் காரணமாக மிகவும் இலக்கியம், சமயம், மொழியியல், தத்துவம் தொடர்பான 6,000 நூல்களும் 1115ஆம் ஆண்டில் கத்தோலிக்க மதத் தலைவர்களால் தமிழில் எழுதப்பட்ட நூல்களும் உள்ளடங்கும். யாழ்ப்பாண நூலகத்தில் இருந்து பெரிய புத்தகங்களில் 1660இல் சிராபேட் சிலோகஸ் எழுதிய hitory of Ceylon யாழ்ப்பாண வரலாற்று நூலான முதலியார் நாயகத்தின் பண்டைய யாழ்ப்பாணம் தமிழில் முதன்முதலாக வெளிவந்த இலக்கிய கலைக்களஞ்சியமான முத்து தம்பியின் அபிதான கோஷம் என்பனவும் சிங்கார வேலு முதலியார் தொகுத்த 'அபிதான சிந்தாமணி' என்பன எரிந்து சாம்பலானது.

இவ்வாறு எரிக்கப்பட்ட பழைய நூலகத்தில் முற்பகுதியைப் புனரமைக்கப்படாது இதனை ஒரு அழிப்பின் சின்னமாகக் கொண்டு யாழ். மாநகரசபையானது அதன் மேற்பகுதியில் ஒரு புதிய கட்டிடத்தை 1984ஆம் ஆண்டு ஜீன் மாதம் கட்டி முடித்தது.

குறைவான புத்தகங்களுடன் இந்த நூலகமானது ஆரம்பிக்கப்பட்டது. மீண்டும் 1988ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தகாலப்பகுதியில் பழைய கட்டிடத்தோடு இணைந்து புதிய கட்டிடமும் பாரியளவு சேதம் அடைந்தது. அதன் பின்னர் 2002ஆம் ஆண்டு மீள் உருவாக்கம் பெற்று இன்றுவரை இயங்கி வருகின்றது.

தற்போது இந்த நூலகமானது பல்வேறு பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. அவற்றுள் இரவல் வழங்கும் பகுதி உசாத்துணைப்பகுதி சிறுவர் பகுதி, ஆவணமாக்கல் பகுதி, விசேட சேர்க்கை பகுதி மற்றும் இந்திய அரசாங்கத்தின் அனுசரணை மூலம் உருவாக்கப்பட்ட இந்தியன் கோர்னர் என்கின்ற பகுதி மற்றும் இலத்திரனியல் நூலகம், கோவா முறைமை என்பனவும் காணப்படுகின்றது.

மேலும் பார்வையற்றவர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கான நூலக முறைமைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


அத்துடன், தொன்மையான பிரதிகள் இல்லாத பல்லாயிரக்கணக்கான மூல நூல்களை இனவெறியின் காரணமாக பறிகொடுத்து, 2009ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த காலப்பகுதிக்கு பின்னர் நாட்டின் தென் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி வருகை தருகின்ற மக்களுக்கும் வெளிநாட்டிலிருந்து வருகின்ற சுற்றுப்பிரயாணிகளுக்கும் ஒரு பிரமாண்டமான வெள்ளை கட்டிடமாக உயிர் அற்ற உடல் போல வடக்கின் பிரதான நினைவுச்சின்னமாக இந்த யாழ்ப்பாண பொது நூலகம் அடையாளப்படுத்தப்படுகின்றது.


### இலங்கை எழுத்தாளர் மாத்தளை பெ.வடிவேலனுக்கு

# தமிழகத்தில் மிகப்பெரிய அங்கீகாரம்

**மாத்தளை வடிவேலனின் "வல்லமை தாராயோ" என்ற சிறுகதை தொகுதி தமிழ் நாட்டில் மிகப்பெரிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களின் வாழ்க்கையின் அவலங்களை மிக யதார்த்தமாகச் சித்தரிக்கும் இலக்கிய தொகுப்பாக இந்த சிறுகதை தொகுதி தமிழ் அறிஞர்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது. இந்த அங்கீகாரத்திற்கு அடையாளமாகத் தமிழக தாய் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் டாக்டர் எம்.ஜி.ஆர்.ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தலைவர் முனைவர் டாக்டர் குமார் ராஜேந்திரனின் விசேட இலக்கிய விருதாக மாத்தளை வடிவேலனின் வல்லமை தாராயோ என்ற சிறுகதைத் தொகுப்பிற்கு இலங்கை நாணயத்தில் ஒரு இலட்சம் ரூபாய் விருது வழங்கி கௌரவித்துள்ளார்.**


மாத்தளை பெ.வடிவேலன்


டாக்டர் குமார் ராஜேந்திரன்


மு.நித்தியானந்தன்

கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் அண்மையில் நடைபெற்ற மாத்தளை வடிவேலனின் வல்லமை தாராயோ என்ற சிறுகதைத் தொகுதி வெளியிட்டு விழாவின் போது டாக்டர் குமார் ராஜேந்திரன் வழங்கிய ஒரு இலட்சம் ரூபாய் பணப்பரிசை, முன்னால் இந்து சமய கலாசார ராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ், முன்னால் ஆளுநர் கே.சி. லோகேஸ்வரன், இலக்கிய புரவலர் ஹசிம்உமர், இந்து சமய கலாசார திணைக்கள முன்னால் பணிப்பாளர்களான க. சண்முகலிங்கம், எ.எம்.நஹியா, சாந்திநாவுக்கரசர், வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீ கஜன், தினகரன் பிரதம ஆசிரியர் தெ.செந்தில் வேலவர் ஆகியோர் முன்னிலையில், கொழும்பு ஈஸ்வரன் குரூப் நிறுவனங்களின் முகாமைத்துவ பணிப்பாளர் தெய்வநாயகம் வீரவாகு, மாத்தளை வடிவேலனிடம் வழங்கி கௌரவித்தார்.




தமிழகத்தின் மிகச் சிறந்த நடுவர்கள் குழு, மலையக மக்களின் வாழ்க்கையைத் தமிழக மக்களுக்கு எடுத்துச் சொல்லும் சிறந்த சிறுகதை நூலாக இலங்கையில் வெளிவந்த "வல்லமை தாராயோ" என்ற தொகுதி இடம்பெறுகின்றது என்று புகழ் பூத்த ஊடகவியலாளரும், துக்ளக், குமுதம், ஜெயா, விஜய் தொலைக்காட்சி நிறுவனத்தில் பணியாற்றியவரும் தற்போது ஷதாய்ஷ சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியருமான மணா தெரிவித்துள்ளார்.

லண்டனில் இருந்து பேராசான் மு.நித்தியானந்தன் இந்த தொகுதிக்கு வழங்கிய முன்னுரை, மாத்தளை வடிவேலனின் எழுத்தாற்றலை தமிழக வாசகர்களுக்கு கொண்டு செல்வதில் பெரும் வெற்றி பெற்றுள்ளது. பதிப்பாளரும் எழுத்தாளருமான எச்.எச்.விக்ரமசிங்கவின் (மாத்தளை செல்வா) பெரும் முயற்சியில் தொகுக்கப்பட்டு, கலை ஒளி முத்தையா பிள்ளை ஞாபகார்த்தக்குழு வெளியிட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் கற்கைகள் துறை மாதாந்த இலக்கிய நிகழ்வில் பேராசிரியர் சி.சந்திரசேகரன் தலைமையில் அறிமுகம் செய்தது, மாத்தளை வடிவேலனுக்கு மற்றுமொரு கௌரவம் ஆகும்.

சாரல் நாடனின் "வானம் சிவந்த நாட்கள்", டாக்டர் குமார் ராஜேந்திரன் அனுசரணை வழங்கிய சி.வி.வேலுப்பிள்ளையின் "மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும்", மு.நித்தியானந்தனின் "மலையக சுடர்மணிகள்", "மலையக இலக்கியம் சிறுமை கண்டு பொங்குதல்". மாத்தளை வடிவேலனின் "வல்லமை தாரயோ" ஆகிய நூல்கள் வரிசையில் சாலிய குணவர்த்தன ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்தில் மொழி பெயர்த்த 10 கதைகளையும், சிங்கள எழுத்தாளர்களான ஜி.பி.சேனாநாயக்க, தெனகம சிறிவர்த்தன, கபிலகுமார காலிங்க, காமினி நிசாந்த கருணாரத்ன ஆகியோர் சிங்கள மொழியில் எழுதியிருக்கும் 4 கதைகளையும் சேர்த்து, மாத்தளை மலரன்பனால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட 14 சிறுகதைகளையும் "கொலுசா பிறமொழி சிறுகதைகள்" என்ற பெயரிலும், "தெளிவத்தை ஜோசப் கதைகள்" என்ற அவரது 59 கதைகளையும், சுமார் 557 பக்கங்களிலும் மலையகத்தின் முன்னோடியான மாக்சீச சிந்தனையாளரும், உயர்ந்த கல்விமானுமாகிய பீ.மரியதாஸின்


எச்.எச்.விக்ரமசிங்க

"மலையகம் 200 - இங்கிருந்து எங்கே" என்ற கட்டுரைத் தொகுதியையும், ஜனவரி 2024ஆம் ஆண்டு சென்னை புத்தகக் கண்காட்சியில் வெளியிட இருப்பதாக கலைஒளி முத்தையா பிள்ளை நினைவுக்குழுவின் செயலாளர் எச்.எச்.விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்

### எங்கள் மீது போர் தொடுக்க நினைப்பது

# “பெரிய தவறு”



இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு திடீரென தாக்குதல் நடத்தினர். அத்துடன், பலர் பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு இஸ்ரேல், காசா மீது ஏவுகணைகளை வீசி பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் இரு பக்கங்களும் பல உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், “இஸ்ரேலுடன் போர் தொடுக்க முற்பட்டால் அதுதான் ஹிஸ்புல்லாவின் மிகப் பெரிய தவறாகும்” என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக பிரதமர் நேதன்யாகு கூறுகையில், “தற்போது ஹிஸ்புல்லா அமைப்பு போரில் முழுமையாக ஈடுபடுமா என்பதை என்னால் கணிக்க முடியாது. ஹிஸ்புல்லா அவ்வாறு முடிவெடுத்தால், அது வருத்தப்படும். ஹிஸ்புல்லா அமைப்பை நினைத்துக்கூட பார்க்க முடியாத சக்தியுடன் நாங்கள் தாக்குவோம். அது ஹிஸ்புல்லா மற்றும் லெபனான் அரசு ஆகிய இரண்டிற்கும் அழிவை ஏற்படுத்தும்” என தெரிவித்துள்ளார்.

போர்த்துக்கல்

## உலகின் மிகவும் வயதான நாய் மரணம்





போர்த்துக்கல் நாட்டை சேர்ந்த ரெப்ரியோ டி அல்டன்டிஜோ இன நாய் கடந்த 1992ஆம் ஆண்டு மே 11ஆம் திகதி பிறந்தது. போபி என்று பெயரிடப்பட்டுள்ள இந்த நாய்க்கு பெப்ரவரி முதலாம் திகதியன்று 30 ஆண்டுகள் 266 நாட்கள் நிறைவடைந்ததால் உலக கின்னஸ் சாதனையில் இடம் பெற்றது.

இந்நிலையில் உடல் நலக்குறைவால் போபி, திங்கட்கிழமை (23) இறந்து விட்டது. இதுவே உலகின் மிகவும் வயதான நாயாகும்.

பலஸ்தீனம்

## பணயக் கைதிகள் இருவரை விடுவித்தது ஹமாஸ்




பலஸ்தீன ஆதரவு நிலைப்பாடு கொண்ட ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதற்கு, ஹமாஸ் தலைமையிடமாக கருதப்படும் பாலஸ்தீன நாட்டின் காசா நகரில் தொடர் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் நடத்தி வருகிறது.

இதனால் அங்குள்ள பலஸ்தீன மக்கள் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வருகின்றனர். ஹமாஸ் அமைப்பினர் வசம் இஸ்ரேல் மற்றும் ஒரு சில வெளிநாட்டவர் என பலர் பிணைய கைதிகளாக உள்ளனர். இவர்களை பாதுகாப்பாக மீட்கும் முயற்சியிலும் இஸ்ரேல் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், இரண்டு பெண் பிணைய கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்துள்ளனர். வயது மூப்பு, மருத்துவ தேவைகளுக்காக அவர்கள் விடுக்கப்பட்டுள்ளதாக ஹமாஸ் அமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தற்போது காசா எல்லை பகுதியில் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷ்

## 2 ரயில்கள் மோதி விபத்து: 15 பேர் உயிரிழப்பு

பங்களாதேஷின் கிஷோர்கஞ்ச் மாவட்டத்தில் இருந்து டாக்கா நோக்கி சென்று கொண்டிருந்த இகரொசிந்துர் எக்ஸ்பிரஸ் ரயில், புறப்பட்ட சில நிமிடங்களில் மாற்று தண்டவாள பாதைக்காக மாற்றப்பட்டபோது, திடீரென வேகமாக வந்த சரக்கு ரயிலுடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

இந்த விபத்தில் எக்ஸ்பிரஸ் ரயிலின் பெட்டிகள் தடம்புரண்டன.

இதன் காரணமாக அதில் பயணம் செய்தவர்களில் 15 பேர் உயிரிழந்தனர்.

மேலும், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.



டெல்லி



## காற்று மாசு அபாயம்

புதுடெல்லியில் தசரா, தீபாவளி, பயிர் கழிவுகள் எரிப்பு, போன்றவற்றால் அடுத்த சில வாரங்களில் காற்று மாசு அபாயகரமான பாதிப்புகளை ஏற்படுத்த கூடும் என அச்சம் எழுந்துள்ளது.

அத்துடன், புதுடெல்லியில் நிலவும் கடுமையான மூடுபனி மற்றும் காற்று மாசு காரணமாக கண் எரிச்சல், மூச்சு திணறலால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல பகுதிகளில் காற்று மாசு மிக மோசமான நிலைக்கு சென்று இருப்பதால் பொது போக்குவரத்தை பயன்படுத்த அறிவுறுத்தி வரும் புதுடெல்லி அரசு, மெட்ரோ ரயில் மற்றும் மின்சார பேருந்துகளின் சேவையை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.

தசரா கொண்டாட்டத்தில் உருவ பொம்மைகள் எரிக்கப்படுவது ஒருபுறம் இருந்தாலும் பஞ்சாப், அரியானா மாநிலங்களில் பயிர் கழிவுகள் எரிக்கப்படுவதும் டெல்லி மாசுவிற்கு முக்கிய காரணமாக உள்ளது. இது தொடர்பாக அண்டை மாநில அரசுகளுடன் பேசியுள்ள புதுடெல்லி அரசு பயிர்கழிவு எரிப்பைக் கட்டுப்படுத்த வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.




குஜராத்

## தெருநாய் கூட்டத்தால் உயிரிழந்த தொழிலதிபர்

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இயங்கி வரும் பிரபல தேநீர் நிறுவனம் வாஹா பக்ரி டீ குரூப். இதன் உரிமையாளர் 49 வயதான பரக் தேசாய். சம்பவத்தன்று இவர் தன் வீட்டின் அருகில் நடைப்பயிற்சி மேற்கொண்டிருக்கிறார்.

அப்போது அப்பகுதியில் சுற்றித் திரிந்த தெருநாய்களின் கூட்டம் அவரை துரத்த ஆரம்பிக்கவே அவற்றிடம் இருந்து தப்பிக்க அவர் வேகமாக ஓடியுள்ளார். அப்போது நிலைதடுமாறி கீழே விழுந்த பரக் தேசாய்க்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக விரைந்த அக்கம் பக்கத்தினர் அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அவரை கொண்டு சென்று சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

தலையில் இரத்த கசிவு ஏற்பட்டு 7 நாட்கள் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த அவர் சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை (24) பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.



உலகக் கிண்ணம்:

# பாகிஸ்தானை வீழ்த்திய ஆப்கானிஸ்தான்

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், சென்னையில் திங்கட்கிழமை (23) நடைபெற்ற பாகிஸ்தான் உடனான போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 282/7 (50 ஓவ.) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 74 (92), அப்துல்லாஹ் ஷஃபிக் 58 (75), இஃப்திஹார் அஹ்மட் 40 (27), ஷடாப் கான் 40 (38) ஓட்டங்கள். பந்துவீச்சு: நூர் அஹ்மட் 3/49, மொஹமட் நபி 1/31) ஆப்கானிஸ்தான்: 286/2 (49 ஓவ. ) (துடுப்பாட்டம்: இப்ராஹிம் ஸட்ரான் 87 (113), ரஹ்மட் ஷா ஆ.இ 77 (84), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 65 (53), ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி ஆ.இ 48 (45) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹஸன் அலி 1/44, ஷகீன் ஷா அஃப்ரிடி 1/58)

போட்டியின் நாயகன்: இப்ராஹிம் ஸட்ரான்

இந்நிலையில் டெல்லியில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நெதர்லாந்தை அவுஸ்திரேலியா எதிர்கொள்கிறது.

### சாய்ந்தமருது ஹொலிஹீரோஸ் தொடர்:

## சம்பியனானது சம்மாந்துறை




அஸ்ஹர் இப்றாஹிம்

சாய்ந்தமருது ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் தொடரில் சம்மாந்துறை விளையாடுக் கழகம் சம்பியனானது.

சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் கிழக்கு மாகாணத்தில் 24 அணிகளை கொண்டு நடத்தப்பட்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் நிந்தவூர் இராம்ரான் விளையாட்டுக் கழகத்தை வென்றே சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்படுத்தாடிய சம்மாந்துறை விளையாட்டுக் கழகம், 5 ஓவர்களில் 3 விக்கட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 54 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்படுத்தாடிய நிந்தவூர் இம்ரான் 5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 28 ஓட்டங்களையே 15 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

## றியல் மட்ரிட் செல்லும் ஹலாண்ட்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான எர்லிங் ஹலான்டில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் கவனஞ் செலுத்துவதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் எதிர்வரும் 2027ஆம் ஆண்டு வரையில் சிற்றியுடன் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 23 வயதான ஹலான்டைக் கைச்சாத்திடுவதற்கு 180 மில்லியன் யூரோக்கள் தொடக்கம் 200 மில்லியன் யூரோக்கள் வரையான தொகையைச் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.




## சிற்றியில் நீடிக்கும் ஜூலியன் அல்வரேஸ்?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான ஜூலியன் அல்வரேஸில் ஸ்பானிய லா லிகா கழகங்களான பார்சிலோனா, றியல் மட்ரிட் ஆர்வம் காட்டுகின்றபோதும் கழகத்திலேயே அவர் தொடர்வார் என அக்கழகம் நம்பிக்கையுடன் உள்ளதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் 2027ஆம் ஆண்டு வரையில் சிற்றியுடன் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 23 வயதான அல்வரேஸ், இப்போது சிற்றியின் போட்டிகளில் அடிக்கடி ஆரம்பிக்கிறமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றார்

அஸ்ஹர் இப்றாஹிம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் மட்டக்களப்பு - பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட களுதாவளை தேசிய பாடசாலை மாணவன் கே.பகீர்ஜன் 14 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் 1.69 மீற்றர் பாய்ந்து சாதனையை ஏற்படுத்தியுள்ளதுடன் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டார்.

குறித்த விளையாட்டுப் போட்டி கொழும்பு சுகதாச விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 25 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.